# இராம நாமச் சிறப்பு

வால்மீகி முனிவர் இராமாயண சுலோகங்கள்கோடிஎழுதினார். அவர் எழுதிய இராமாயணம் யாருக்குச் சொந்தம் என்ற கேள்வி தேவர், மானிடர் மற்றும் அசுரர் ஆகிய மூவரிடையே எழுந்தது. தேவர்கள் எங்களுக்கே இராமாயணம் சொந்தம் என்று உரிமை கொண்டாடினர். மானிடர்களும் எங்களுக்கே சொந்தம் என்றும் வாதிட்டனர். அசுரர்களும் எங்களுக்கேதான் சொந்தம் என்று போரிட்டனர். அவர்கள மூவருக்கும் வாதம் பெரும் அளவில் வளர்ந்து விட்டது. அவர்களுக்குள் சமாதானம் ஏற்படுவதாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் வலிமைப் பெற்று இருந்தபடியால் ஒருவரை ஒருவர் வெல்லஇயலவில்லை ஆனல் சண்டையோ தொடர்ந்து நடந்து வந்தது. இறுதியில் மூவரும் வழக்கைத் தீர்ப்பதற்கு சிவபெருமானின் உதவியை நாடினர்.

சிவபெருமான் அவர்கள் போடும் சண்டையில் இராமாயணம் எங்கு அழிந்துவிடுமோ என்று எண்ணினர். அவர்களுக்குள் சமாதானம் ஏற்படா விட்டால் இராமாயணத்திறகு எப்பொழுதும் ஆபத்துதான் எனபதை உணர்ந்து கொண்டார். எனவே அவர்கள் வழக்கினை விசாரிக்கும் நீதிபதியாக பொறுப்பு ஏற்றுக்கொண்டார். அந்தமூவர்களையும் அழைத்தார் சிவபெருமான். அம்மூவர்களால் ஒரு கோடி இராமாயண சுலோகங்களில் ஆளுக்கு முப்பத்து மூன்று லட்சம் சுலோகங்கள் வீதம் பகிர்ந்து கொடுத்தார். கோடி சுலோகங்களில் தேவருக்கு முப்பத்து மூன்று லட்சம், மானிடருக்கு முப்பத்து மூன்று லட்சம், அசுரருக்கு முப்பத்து மூன்று லட்சம் வீதம் தொண்ணூற்று ஒன்பது லட்சம் சுலோகங்கள் பகிர்ந்து அளிக்கப்பட்டன.

பாக்கியாக ஒரு லட்சம் சுலோகங்கள் மிஞ்சி இருந்தது. அதையும் ஆளுக்கு மூன்றாக பங்கிட்டுக் கொடுத்தார். கடைசியில் ஒரே ஒரு சுலோகம் மட்டும் மிஞ்சியது. அந்த ஒரு சுலோகத்தையும் பங்கு போட்டார். அந்த சுலோகத்தில் முபபத்திரண்டு எழுத்துக்கள் இருந்தன. முப்பத்து இரண்டு எழுத்துக்களை ஆளுக்கு பத்து வீதம் மூன்றுபேருக்கும் பங்கிட்டார். முப்பத்திரண்டு எழுத்துக்களில் முப்பது போக மீதி இரண்டு எழுத்துக்கள் இருந்தன. அந்த இரண்டு எழுத்துக்களை மூன்றுபேருக்கு பங்கிடமுடியாது.

என்ன செய்வது? அந்த மூன்று பேர்களும் யோசித்தனர். உடனே சிவபெருமான் 'வழக்கைத்தீர்த்துவைத்த எனக்கு ஏதாவது ஊதியம் வேண்டாமா? இந்த இரண்டு எழுத்துக்களை மட்டும்தான் நான் எனக்குக் கிடைத்த ஊதியமாகஎடுத்துக்கொள்கின்றேன்' என்று சொல்லிவிட்டு அந்த இரண்டு எழுத்துக்களையும் எடுத்துக்கொண்டார். லட்சக்கணக்கான எழுத்துக்களையும், சுலோகங்களையும் அடைந்த அந்த மூன்றுபேர்களும் அதற்கு ஒப்புக்கொண்டனர். வெறும் இரண்டு எழுத்துக்கள்தானே சிவனுக்கு என்று எணணிக் கொண்டனர். அந்த இரண்டு எழுத்துக்கள்தான் யாவை? "இரா" "ம" என்பவையே அந்த இரண்டு எழுததுக்களாகும்.

கோடி சுலோகங்களின் சாரம் முழுவதும் அந்த இரண்டே இரண்டு எழுத்துக்களில அடங்கிவிட்டது. அவற்றைப்பெற்றதால் ஞானத்திலும், அறிவிலும் எந்த தேவனோ, அரசனோ, மனிதனோ சிவப்பெருமானுடன போட்டியிட்டு வெல்லமுடியவில்லை. 'இராம' நாமச் சிறப்பு இறைவனை எல்லாவற்றிலும் வல்லவனாக மாற்றி விட்டது.

திரு. என். ஆர். ஜெயசந்திரன், பி.காம்,
காவேரிப்பட்டணம்.

**ஆதாரம்: விநோபாபாவே அவர்களின தத்துவக் கதைகள்**

ஸப்தகிரி வாசகர்,
எழுத்தாளர் மற்றும்
விற்பனைப பிரதிநிதிகளுக்கு
எங்களுடைய இதயங்கனிந்த
தமிழ்ப் புத்தாணடு
நல் வாழ்த்துகள்

ஆசிரியர்.